தவிப்பதற்காகத் தஞ்சாவூர் கழிமுகப் பகுதியில் வடிகால் திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதை முதல் அமைச்சர் வலியுறுத்தினர். இம் மாநில அரசின் அதிகாரி ஒருவரால் உருவாக்கப்பட்டு, மத்திய அரசின் ஆய்வில் உள்ள வேளாண்மைச் சீரமைப்புத் திட்டத்தைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னர்கள்.

THIRU K. VINAYAKAM : Whereas only the Central Government is competent to negotiate with the World Bank Chief in the matter of loans to be given to us, is it not a fact that the Mayor of Madras met the World Bank Chief and asked for twenty crores of rupees and is it in order to allow a local body like the Corporation of Madras to negotiate?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மேயர் அவர்கள் கடன் கேட்டாரா என்று எனக்குத் தெரியாது. உடன் இருந்து பார்த்திருந்தால் தெரிந்திருக்குமோ என்னவோ. சென்னைத் தெருவிளக்குப் பிரச்சினை பற்றி மேயர், உலக வங்கித் தலைவரோடு பேசியதாகத்தான் எங்களுக்குக் கிடைத்த தகவல்.

Film Censorship Enquiry Committee

* 266 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Film Censorship Enquiry Committee has invited the views of the State Government during its sitting at Madras about the 10th September 1968?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரைப்படக் கொட்டகைகளுக்கு உரிமம் வழங்கல்

* 267 வின.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-68-ம் ஆண்டில் நமது மாநிலத்தில் எத்தனை புதிய திரைப்படக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது ?

(இ) திரைப்படக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ் வழங்குவதில் அரசின் கொள்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 76.

(இ) திரைப்படம் காண்பிக்கப்படுவதற்கான உரிமங்கள், தமிழ்நாடு 1955-ம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ் முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. என். கிட்டப்பா : செமி பர்மனெட் தியேட்டர்களுக்கு உரிமை வழங்க இருப்பதாக அறிவிக்கப்பட்டதே, அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதற்கான விதி முறைகள் திருத்தி அமைக்கப்பட வேண்டியிருப்பதால், எப்படி அவற்றை மாற்றியமைக்கலாம் என்பது அதிகாரிகளுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : பர்மனென்ட் தியேட்டர்கள், டூரிங் தியேட்டர்கள் இவற்றிற்கிடையில் உள்ள தூரம் ஒரு மைலுக்குக் குறைவாக ஏறக்குறைய இரண்டு பர்லாங் தூரமாக இருந்தாலும், அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படி வரும் கோரிக்கைகள் மீதுதான் அதிகாரிகள் மட்டத்தில் பரிசீலனை நடக்கிறது.

Non-recognised Schools in Tamil Nadu.

* 268 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any schools which have not received the recognition and approval from the State Government are being run and maintained by the Panchayats and Panchayat Unions in this State;

(*b*) if so, the total number of such schools; and

(*c*) the total number of students studying in such of those non-recognised schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 96.

(இ) 4,220.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்த மாதிரி அங்கீகாரம் கிடைக்காத பள்ளிக்கூடங்கள் பல இருக்கின்றன. அந்தப் பள்ளிகளில் படித்து பாஸ் செய்த மாணவர்கள், மேல் படிப்புக்கு மற்றைய பள்ளிகளுக்குப் போனால், அங்கீகாரம் இல்லாத பள்ளியில் படித்தார்கள் என்பது தடையாக இருக்கிறது. ஆகவே, இதைப் பரிசீலனை செய்து, இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு அங்கீகாரம் அளிக்க, அல்லது அந்தப் பள்ளிகளில் படித்துத் தேறிய மாணவர்கள் மற்றைய பள்ளிகளுக்குப் போகும் போது, இந்தப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் இல்லை என்பது தடையாக இல்லாமல் இருக்கும் வகையில் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு துவக்கப் பள்ளி நிறுவவேண்டும் என்றால், 300 மக்கள் இருக்கவேண்டும், அல்லது ஒரு மைல் சுற்று வட்டாரத்தில் வேறு பள்ளி இல்லை என்றால் ஆரம்பிக்கலாம் என்ற சூழ்நிலையில், அப்படி முதலில் ஆரம்பித்து விட்டு, பிற்பாடு அரசாங்கத்திற்கு எழுதி அனுமதி பெறலாம் என்ற உத்தரவு இருந்தது. ஆனால், அந்த அடிப்படையில் 300 மக்கள் அல்லது ஒரு மைல் சுற்று வட்டாரத்தில் பள்ளி இல்லாமை ஆக இரண்டையும்